# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066968

1. District மாவட்டம் : விழுப்புரம் PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year ஆண்டு : 2019 FIR No மு.த.அ. எண் : 11/2019 Date நாள் : 25.06.19.

2. (i) Act சட்டம்: IPC & PC ACT. Sections பிரிவுகள்: 167, 420, 409, 468
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: IPC, 13(2) R/W
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13 (1) (a) and 13 (1)(c)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : of PC ACT 1988 as amended by PC (Amendment) ACT 2018.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2010 to 2011 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் & 2015 to 2016. Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 4 பேர்கள் மீது ஆரம்ப விசாரணை செய்து இன்று 25.06.19 ம் தேதி காலை 11.00 மணிக்கு வழக்கு பதிவு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 25.06.19 at 11.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக (Suo motto) விசாரணை அறிக்கையின் படி.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடசிறுவலூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதி வடசிறுவலூர் ஊராட்சி மன்றம்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திண்டிவனம் TK. சுமார் 70 Km வடக்கே
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
— Nil —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ம. [illegible]
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) நாரா[illegible] வடசிறுவலூர் முன்னாள் கிராம ஊராட்சி மன்ற தலைவர். (2) கார்த்திகேயன் வடசிறுவலூர் கிராமம் முன்னாள் துணைத் தலைவர் (3) நாராயணன் BDO மயிலம் (4) நரசிம்மன் BDO(V) மயிலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் வடசிறுவலூர் கிராமம் மு. நாராயணசாமி, திண்டிவனம் TK என்பவர் கடந்த 20.02.17 ம் தேதி விழுப்புரம் ஊ.த.க பிரிவில் கொடுத்த புகார் அடிப்படையில் PE 113/17/DPA/VPM ன்படி [illegible] ஆரம்ப விசாரணை செய்ததில், 4 பேர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய [illegible] கொடுத்ததால் இன்று 25.06.19 ம் தேதி காலை 11.00 மணிக்கு ஆய்வாளர் விசாரணை அறிக்கையின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— NIL —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு - NIL -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் - NIL

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலூக்கா, வடசிறுவலூர் கிராமத்தைச் சேர்ந்த மு.நாரயணசாமி என்பவர் கடந்த 28.02.2017 ந் தேதி விழுப்புரம் ஊ.த.க.பிரிவுக்கு அனுப்பிய புகாரின் மீது PE.113/2017/RDP/VPM ன் படி முன் அனுமதி பெற்று முதல் நிலை விசாரணை செய்ததில் மேற்படி புகாரில் வழக்கு பதிவு செய்து விசாரிக்கக்கூடிய குற்ற முகாந்திரம் இருந்ததால் இன்று 25.06.2019 ந் தேதி காலை 11.00 மணிக்கு ஆய்வாளர் செய்த முதல் நிலை விசாரணையின் இறுதி அறிக்கையின் படி விழுப்புரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.11/2019/AC/VPM சட்டப்பிரிவு 167, 420, 409, 468 of IPC and 13(2) r/w 13(1)(a) and 13(1)(c) of PC act 1988 as amended by P.C.(Amendment) Act 2018-ன்படி வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் அளித்த முதல் நிலை விசாரணையின் இறுதி அறிக்கையின் விபரம் பின்வருமாறு:- கடந்த 2011ஆம் ஆண்டு நடைப்பெற்ற உள்ளாட்சி தேர்தலில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வடசிறுவலூர் கிராமத்தை சேர்ந்த திரு.ரவி என்பவர் வடசிறுவலூர் ஊராட்சிமன்ற தலைவராக 25.10.2011 அன்று பதவி ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும் அதே ஊராட்சியில் திரு.கார்த்திகேயன் என்பவர் ஊராட்சிமன்ற துணைத் தலைவராக தேர்வு செய்ப்பட்டு 29.10.2011 அன்று துணைத் தலைவராக பதவி ஏற்றுக்கொண்டார். மேற்படி இருவரும் 24.10.2016 வரை தலைவர் மற்றும் துணைத் தலைவர்

(இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 25/6/19.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25. 06. 2019. at 12.30 hours.

Name: பெயர் M. SATHISH
Rank: நிலை INSPECTOR No. எண் ..........
VC&AC VILLUPURAM.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பொறுப்பு வகித்து வந்துள்ளனர். மேற்சொன்ன இருவரும் சம்பவ காலத்தில் ஊழல் தடுப்பு சட்டம் 1988ஐ திருத்திய ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட சட்டம்) 2018 பிரிவு 2 (C) ன்படி பொது ஊழியர்கள் ஆவர். தலைவர் மற்றும் துணைத்தலைவர்களின் பணியானது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 110-ன் படி கட்டாய கடமைகளான பொதுமக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு அமைத்தல், சுகாதார வசதி ஆகியவற்றை ஏற்படுத்தி தருவது மற்றும் அவற்றை பராமரித்தல் மற்றும் பிரிவு 111-ன்படி விருப்ப கடமைகள் நிறைவேற்றுதல் மற்றும் பிரிவு 112, 113, 114 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறையின்படி மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன்கூடிய திட்டங்களை நல்லமுறையில் நிறைவேற்றுதல் (ஒப்பளிப்பு கடமைகள்) ஆகியவையாகும். இந்திராகாந்தி குடியிருப்பு திட்டம் (IAY) என்பது கூரை வீடுகளை நிரந்தர கான்கிரீட் வீடுகளாக மாற்றியமைக்கும் பொருட்டு, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் கண்டறியப்பட்டு அந்தெந்த ஊராட்சியின் கிராம சபாவின் ஒப்புதல் பெறப்பட்ட பட்டியலில் இருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்பட வேண்டும்.மேற்படி பயனாளிகளுக்கு கூரை வீடு, 21/2 ஏக்கருக்குள் நிலம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அரசு பணியில் உள்ளவர்களுக்கோ, அவருடைய குடும்பத்தினர்களுக்கோ, திருமணம் ஆகாதவருக்கோ கொடுக்கக் கூடாது. மேலும் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு முன்பாக பயனாளியின் தகுதியை கள ஆய்வு செய்து பயனாளிகளின் தகுதியை உறுதி செய்து அதன் பின்னரே பயனாளிகளுக்கு வேலை உத்தரவு (Work Order) வழங்கவேண்டும். குற்றச்சாட்டு 1. 2010-2011ஆம் ஆண்டில் KVVT திட்டத்தின் கீழ் பயனாளி திருமதி. ராணி க/பெ வாசுதேவன் என்பவருக்கு அப்போதைய வட்டாரவளர்ச்சி அலுவலரால் ந.க.அ246/2011, நாள் 28.01.2011ன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பயனாளி ராணி என்பவர் வீடு கட்டி முடித்து அதற்கான அரசு பணம் அனைத்தும் முறையாக வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி பயனாளிக்கு மீண்டும் 2015-2016ஆம் ஆண்டில் IAY திட்டத்தின் கீழ் கிராம சபா தீர்மான எண் 15ன்படியும் நாள்: 01.05.2015 அப்போது வட்டார வளர்ச்சி அலுவலராக பொறுப்புவகித்த திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் தனது அலுவலக செயல்முறை ஆணை எண்.1/285/2015 நாள்: 2.9.2015-ன்படி வேலை உத்தரவு வழங்கியுள்ளார். அதன்படி பயனாளியால் வீடு கட்டி முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூபாய் 1,20,000/- நான்கு பட்டியலாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வகையில் பயனாளி திருமதி.ராணி என்பவருக்கு 2010-2011 ஆம் ஆண்டில் KVVT திட்டத்தில் வீடு வழங்கப்பட்டு அரசு தொகை வழங்கப்பட்டுள்ள விவரம் தெரிந்தும், மேற்படி கிராமத்தை பற்றியும் கிராமத்தில் வசிக்கும் நபர்களை பற்றியும் நன்கு தெரிந்தும் யார்யாருக்கு இதற்கு முன்னர் அரசு திட்டத்தின் கீழ் வீடு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிந்தும் விதிமுறையை மீறி ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி ஊராட்சி மன்ற தலைவர் திரு.ரவி மற்றும் துணைத்தலைவர் திரு.கார்த்திகேயன் ஆகியோர்கள் விதிமுறையை மீறி திருமதி.ராணியை பயனாளியாக தேர்ந்தெடுத்துள்ளனர் என்பது விசாரணையில் தெரியவருகிறது. மேலும், அப்போது பணியில் இருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் மேற்கண்ட வகையில் விதிமுறையை மீறி முறைகேடாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி ராணியின் கோப்பை சரிவர பரிசீலனை செய்யாமலும், உரிய விசாரணை மேற்கொள்ளாமலும், தான் செய்யவேண்டிய பணியை சரிவர செய்யாமல் பயனாளிக்கு IAY திட்டத்தில் வீடு கட்ட வேலை உத்தரவு பிறப்பித்து அதற்கான தொகை ரூ.1,20,000/.யை விடுவித்துள்ளார். குற்றச்சாட்டு- 2:__வடசிறுவளூர் ஊராட்சியில் 2015-2016 ஆண்டில் கிராம சபா தீர்மான எண் 15ன்படியும், அப்போது பொறுப்பு வகித்த வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திரு.S.ராதாகிருஷ்ணன் என்பவர் தனது அலுவலக செயல்முறை ஆணை எண் ஆ1/285/2015 நாள்: 4.6.2015 ன்ப திரு.அஜித்குமார் த/பெ சுதாகர் என்பவருக்கு IAY திட்டத்தில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு அதன்படி பயனாளியால் வீடு கட்டி முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூபாய் 1,20,000/- நான்கு பட்டியலாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பயனாளி 18 வயதுடையவர் என்பதும், அவர் திருமணம் ஆகாமல் தனது பெற்றோரின் பராமரிப்பில் இருந்துவருகிறார். மேற்படி பயனாளியின் தந்தை அரசு ஊழியர் ஆவார். இந்நிலையில் இவருக்கு அரசு IAY திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு செய்திருப்பது விதிமுறைக்கு முரணானதாகும். மேலும், இத்திட்டத்தின்படி வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டுமே வீடு வழங்கவேண்டுமென்று விதிமுறை உள்ளபோது குற்ற அலுவலர்கள் திரு.ரவி ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் திரு.கார்த்திகேயன் துணைத்தலைவர் ஆகியோர்கள் மேற்படி கிராமத்தை பற்றியும் பயனாளி திரு.அஜித்குமார் திருமணமாகாமல் அரசு ஊழியரான தனது தந்தையுடன் வசித்து வருவது பற்றி நன்கு தெரிந்தும் விதிமுறையை மீறி அவரை பயனாளியாக தேர்வு செய்து ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அவருக்கு மேற்படி IAY திட்டத்தில் வீடு வழங்க பரிந்துரை செய்துள்ளனர். மேலும், அப்போது பணியில் இருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் மேற்கண்ட வகையில் விதிமுறையை மீறி முறைகேடாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி அஜித்குமாரின் கோப்பை சரிவர பரிசீலனை செய்யாமலும், உரிய விசாரணை மேற்கொள்ளாமலும், தான் செய்யவேண்டிய பணியை சரிவர செய்யாமல் பயனாளிக்கு IAY திட்டத்தில் வீடு கட்ட வேலை உத்தரவு பிறப்பித்து அதற்கான தொகை ரூ.1,20,000/.யை விடுவித்துள்ளார். குற்றச்சாட்டு-3: மேற்படி ஊராட்சியில் 2010-2011 ஆம் ஆண்டில் IAY திட்டத்தில் மேற்படி வடசிறுவளூர் கிராமத்தைச்சேர்ந்த திரு.காந்தி த/பெ முருவன் @ மாரிமுத்து என்பவருக்கு ஏற்கனவே கான்கிரீட் வீடு உள்ள நிலையில் அப்போதைய ஊராட்சி மன்ற தலைவர் காலஞ்சென்ற V.ராஜேந்திரன் என்பவர் விதிமுறையை மீறி ஊராட்சி மன்ற தீர்மான நாள்: 22.08.2010ன்படி பயனாளியாக தேர்வு செய்துள்ளார். அதன் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ரவிசந்திரன் என்பவர் செயல் முறை ஆணை எண்: ஆ1/2788/2010/42 நாள்:01.09.2010ன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டு, அதன்படி பயனாளி வீடுகட்டி முடித்துள்ளார். மேற்கண்ட வகையில் விதிமுறைகளை மீறி திரு.காந்தி என்ற பயனாளியை தேர்வு செய்து அனுப்பப்பட்ட கோப்பினை குற்ற அலுவலர் திரு.ரவிசந்திரன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்கள் கோப்பை சரிவர பரிசீலனை செய்யாமலும், உரிய விசாரணை மேற்கொள்ளாமலும், தான் செய்யவேண்டிய பணியை சரிவர செய்யாமல் பயனாளிக்கு IAY திட்டத்தில் வீடு கட்ட வேலை உத்தரவு பிறப்பித்து அதற்கான முறைகேடாக தொகை ரூ.1,20,000/.யை விடுவித்துள்ளார். மேற்கூறிய முதல் நிலை விசாரணையில் கண்ட மூன்று குறைகளில் எதிரிகள் கிராம ஊராட்சி மன்ற தலைவர் திரு.ரவி (A1) மற்றும் கிராம ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு.கார்த்திகேயன் (A2) ஆகியோர்கள் பயனாளிகள் அதே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் மேற்கூறிய விதத்தில் தகுதியற்றவர்கள் எனத் தெரிந்திருந்தும் அவர்கள் தகுதியின்மையை மறைத்து தகுதியுள்ளவர்கள் போல தவறான ஆவணங்களை புனைந்தும், அரசை ஏமாற்றி அரசு பணத்திற்கு நஷ்டம் விளைவித்தும் நம்பிக்கை மோசடி செய்து பொது ஊழியர்களாக இருந்தும் அரசு பணத்தை கையாடல் செய்ய ஏதுவாக இருந்துள்ளார்கள் என்பது முதல் நிலை விசாரணையில் தெரியவந்துள்ளது. அதுபோல் வட்டாரவளர்ச்சி அலுவலர் திரு.ராதாகிருஷ்ணன் (A3) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ரவிச்சந்திரன் (A4) ஆகியோர்கள் மேற்கூறிய தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் தகுதி குறித்து கள ஆய்வு செய்து சரிவர விசாரணை செய்து பரிசீலனை செய்து தேர்வு செய்யப்பட்ட பயனாளிகைக்கு வேலை உத்திரவு வழங்க வேண்டிய கடமை இருந்தும் அவ்வாறு எவ்வித ஆய்வும் செய்யாமலேயே செய்தது போலவோ அல்லது ஆய்வு செய்து பயனாளிகளில் தகுதியின்மை தெரிந்தே தவறான ஆவணம் புனைந்து வேலை உத்திரவு வழங்கி, அரசை ஏமாற்றி அரசு பணத்திற்கு நஷ்டம் விளைவித்து, நம்பிக்கை மோசடி செய்து பொது ஊழியங்கைளாக இருந்தும் பொதுச் சொத்தை கையாடல் செய்ய ஏதுவாக இருந்ததாக குறைகள் இருப்பது முதல் நிலை விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் மேற்கூறிய குறைகளை பொருத்த மட்டில் எதிரிகள் ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்து தூண்டுதலாக இருந்துள்ளனர் (Aabetment by aiding) என்பது

தெரிகிறது. மேற்படி குற்றச்சாட்டுகளில் 1). திரு.ரவி, வடசிறுவளூர் கிராம ஊராட்சி மன்ற தலைவர், 2).திரு.கார்த்திகேயன், வடசிறுவளூர் கிராம துணைத்தலைவர், 3).திரு.ராதாகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஒலக்கூர் 4).திரு.ரவிசந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), ஒலக்கூர் ஆகியோர்கள் தகுதியற்ற நபர்களை பயனாளிகளாக தேர்வு செய்தது உறுதியாகிறது. ஆகையால் மேற்சொன்ன நபர்கள் மீது இன்று 25.06.2019 தேதி 11.00 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.11/2019/AC/VPM சட்டப்பிரிவு 167, 420, 409, 468 of IPC and 13(2) r/w 13(1)(a) and 13(1)(c) of PC act 1988 as amended by P.C.(Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள்) விழுப்புரம் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல்கள் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பில் வைக்கப்பட்டது.

25/6/19
M. Samitha
IM / VACB / VPM